**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

வா.சா.1 –பொன்னுசாமி OS.No. 23 /2021 நாள் : 08.07.2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இந்த வழக்கில் வம்சாவழி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் மேகனாதன் மனைவி 12ம் பிரதிவாதி ஆவார் என்றால் சரிதான். இந்த வழக்கின் 9ம் பிரதிவாதி நான் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் 12ம் பிரதிவாதி மலர்விழியை தவிர மற்ற அனைவரும் குடும்பத்திற்கு சம்மந்தம் இல்லாத 3ம் தரப்பினர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுப்ரமணியன் எனது மாமனார் என்றால் சரிதான். எனது மாமனாரை அவரது மகன் 1ம் வாதியான திரு. மேகனாதன், தலை மற்றும் இடுப்பில் அடித்ததால் கடந்த 2 வருடமாக படுக்கையில் இருக்கிறார் என்றால் சரிதான். மேகநாதன் அடித்தார் என்று வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் உடையார்பாளையம் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது. அதனை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதி மேகநாதன் தலையில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டு முடியாமல் இருக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு ஏதும் தெரியாது. அவரை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். அவரது தலையில் பாதி மண்டையோடு எடுக்கப்பட்டு குழியாக இருக்கும் என்றால் அந்த அளவுக்கு நான் கூர்ந்து கவனித்ததில்லை. அவர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பார்த்திருக்கிறேன். நான் என்னவாக வேலை பார்த்துவருகிறேன் என்றால் கிருத்துவ சபை போதகராக பணியாற்றி வருகிறேன் நான் பிறப்பிலேயே கிருத்துவர் ஆவேன். எனக்கும் எனது மனைவிக்கும் கிருத்துவ முறைப்படி

சர்ச்சில் திருமணம் நடைபெற்றது. எனது மாமனார் சுப்ரமணியனின் தகப்பனார் பெயர் பக்கிரிசாமி படையாட்சி என்றால் சரிதான். பக்கிரிசாமிக்கு எத்தனை மகன்கள் என்றால் 2 மகன்கள் இருக்கிறார்கள் மற்றும் ஒரு மகன் இறந்து விட்டார். பக்கிரிசாமி அவரது பூர்வீக சொத்துக்களை அவரது மகன்களுக்கு பிரித்துகொடுத்துவிட்டார் என்றால் அது பூர்வீக சொத்தா என்று எனக்கு தெரியாது ஆனால் பிரித்து கொடுத்துவிட்டார். அதனை அவர்கள் வாய்மொழியாக பிரித்து கொண்டு பின்பு பிரச்சனை ஏதும் வரக்கூடாது என்பதற்காக ஆவணம் செய்துகொண்டு கையொப்பம் இட்டார்கள் என்றால் சரிதான்.பக்கிரிசாமிக்கு மொத்தம் 16 ஏக்கர் சொத்துக்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு விவரம் பொருத்து எனக்கு தெரியுமா என்றால் எனது மாமனார் சொல்லியிருப்பது வரை எனக்கு தெரியும் மற்ற விவரங்கள் ஏதும் இருப்பின் அது பற்றி எனது மாமனாரை கேட்டால் தெரியும்.எனது மாமனாரை விசாரிப்பேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன். பக்கிரிசாமிக்கு பூர்வீக சொத்து 16 ஏக்கர் இருந்தது என்றும் அதனை பக்கிரிசாமியின் 4 மகன்களுக்கு பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்,அது 16 ஏக்கரா என்றால் எனக்கு தெரியாது. அந்த சொத்து பக்கிரிசாமியின் பூர்வீகமா அல்லது அவர் வாங்கியதா என்றால் எனக்கு தெரியாது நான் அது சம்மந்தமாக ஏதும் விசாரிக்கவில்லை. இந்த சொத்து பூர்வீகம் இல்லை என்றும் பக்கிரிசாமி வாங்கினார் என்பதற்காக கிரைய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் பக்கிரிசாமி எனது மாமனாருக்கு பிரித்து கொடுத்த சொத்துக்களா என்றால் ஆமாம். பக்கிரிசாமி 1987 லிலும் அவரது மனைவி அஞ்சலையம்மாள் 1988 லும் இறந்து விட்டனரா என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதியின் முதல் மனைவி மங்கையர்கரசி 21.09.2013 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பு குறுக்கு விசாரணை கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது).**

**ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**அரியலூர்.**